1975 மார்ச் 14]

திரு. கோ. இளங்கோவன்: பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். பல கல்லூரிகளில் இது பாடமாக அமைந்திருக்கிறது என்று சொன்ஞர்கள். இது எந்தப் பாடமாக அமைந்திருக்கிறது? இதற்கும் சான்றிதழ் என்ன வழங்கப் படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: வரலாறு எடுக்கின்றவர் களுக்கு இது ஒரு துணைப்பாடமாக அமைந்திருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there are a large number of inscriptions, both epigraphs and copper plates, not only in Tamil, but in Telugu and Sanskrit also. They are very important. But since our epigraphists are not able to read them, they are neglecting them. May I know from the Hon. Minister for Education and Tourism whether training classes are arranged and even candidates of other languages also are taken?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே. தமிழகத்தில் 80 ஆயிரம் கல்வெட்டுகளுக்குமேல் இருக்கின்றன. தமிழ், வட்ட எழுத்து, கிரந்தம், நாகரி ஆகிய எழுத்துக்களில் உள்ள அந்தக் கல்வெட்டுகளைப் படிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. கல்வெட்டு எந்தெந்த மொழிகளில் இருக்கின்றனவோ அவற்றைப் படிக்க அந்தந்த மொழிகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா: கல்வெட்டுகளில் பயிற்சி கொடுக்க அவர்களைப் பல இடங்களுக்கு அழைத்துச் செல்வதாகச் சொல்லப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் மாயூரத்திற்கு அருகில் உள்ள நீடூரில் அதிகமான கல்வெட்டு கள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்களே, நீடூருக்கு அழைத்துச் செல்லக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எந்தந்த இடத்திற்கு அவர்களை அழைத்துச் சென்று பயிற்சியினைக் கொடுப்பது என்பதை அவர்களேதான் தீர்மானிக்கிறார்கள். இதில் நாம் அபிப்பிராயம் சொல்வதற்கு ஒன்றும் இல்லை. இன்ன ஊருக்குத்தான் போகவேண்டு மென்று சொல்வதற்கில்லை. எந்தெந்த இடங்களில் கல்வெட்டுகள் இருக்கின்றனவோ அந்த அந்த இடங்களுக்கு எல்லாமே அழைத்துச் செல்வார்கள்.

Import Procedure.

* 314 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state :

(a) Whether the Government of Tamil Nadu have appealed to the Centre for the simplification of import procedure; and

(*b*) if so, whether any reply has been received for the same?

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இவ்வினவிற்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: இப்போது நாம் என்ன என்ன பொருள்களை இறக்குமதி செய்கிறோம்? முக்கியமாக, அவற்றை இறக்குமதி செய்வதில் நமக்குள்ள கஷ்டங்கள் என்ன? இது பற்றி மத்திய சர்க்காருக்கு நாம் என்ன எழுதியிருக்கிறோம்?

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா: இதுபற்றி முதலமைச்சர் அவர்களே ஒரு விழாவில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனும் என்னென்ன உதவிகளைச் செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது முக்கியமாக சில நாட்களாக தீப்பெட்டித் தொழிலுக்குத் தேவைப்படுகிற பொட்டாஷியம் குளோரைட் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இறக்குமதி லைசென்ஸ் வாங்கியபிறகு பலர் அதைத் தவறாகப் பயன்படுத்துவதாகவும், விற்றுவிடுவதாகவும் நாடாளுமன்றத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறதே. அப்படி நம்முடைய மாநிலத்தில் இறக்குமதி லைசென்சை தவறாகப் பயன்படுத்தியவர்கள் பட்டியல் ஏதாவது அரசாங்கத்தினிடத்தில் இருக்கிறதா? அந்தப் பட்டியலை அவைமுன் வைக்க முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற விவரம் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் சேகரித்துக்கொடுக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: பொட்டாசியம் குளோரைட் தீப்பெட்டித் தொழிலுக்கு மிகவும் இன்றியமையாதது. அது கிடைக்காத காரணத்தினால் தென்மாவட்டங்களில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மிகுந்த கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளன. துரிதமாக இதை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தீப்பெட்டித்தொழில் மூடப்படாதிருக்கவும், தொடர்ந்து இருந்துவரும் பொட்டாஷியம் குளோரைட் தட்டுப்பாட்டால் நிலவும் நெருக்கடி சூழ்நிலையைக் குறைக்கவும் சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் இது பற்றி மத்திய அரசுடனும், அதனுடைய வணிக கழகத்துடனும் வேண்டிய அளவு இறக்குமதி செய்வதுபற்றி தொடர்பு கொண்டுள்ளது.

ஸ்டார்ச் முதலியன தயாரிப்பு.

*315 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில்—மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—